ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 6 இதழ் : 9 ஜூலை – 2010

செய்திமலர்

பீல் ஆதிவாசி மக்கள்
அறுவடைப் பணியில்

## 20
## வது ஆண்டு...

20th Year
Sharing Love Mission




## கர்த்தர் நல்லவர்,
## அவர் கிருபை என்றுமுள்ளது

2 நாளா. 5:13

ஆசிரியர்
சகோ. வே. தேவதாஸ்



**Allahabad Bible Seminary - ல் B.T.S., (Bachelor of Theological Studies)**
**படித்து முடித்து பட்டம் பெற்ற நமது ஷாலோம் 55 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் (08.06.2010)**

## B.Ts., முடித்து பட்டம் பெற்ற 55 ஊழியர்களின் பெயர் பட்டியல்:–

Mr. Aliya N.Ganava (Anil)
Mr. Havsingh N.Sangada
Mr. Manga K.Bhuria (Mangu)
Mr. Suresh P.Hathila
Mr. Rathan S.Mavi
Mr. MR. SOMSINGH BHURIYA
Mr. MR. DAL SINGH BARIYA
Mr. Gorsingh Dhanna (Gorsingh Meida)
Mr. Mathur Mehji (Mathur M.Bhuriya)
Mr. Pursan L.Bhuriya (Purson)
Mr. Hardar Damor (Sardar J.Damor)
Mr. Hiralal H.Hattara
Mr. Kavji T.Kattara
Mr. Pratapsingh M.Baria

Mr. Chandrasingh R.Damor (Chandu)
Mr. Jinu P.Mavi
Mr. Masur K.Ganava
Mr. Tharsingh R.Vagela
Mr. MR. DAMOR SURMALBHAI MANABHAI
Mr. MR. BABU LAL
Mr. MR. MUNESH DAMOR
Mr. Himraj J.Baberia
Mr. Mukesh Homa (Mukesh H.Vasunia)
Mr. Ralusingh K.Hathila
Mr. Badar Baria
Mr. Kallu K.Dindod
Mr. Kidiya H.Machar
Mr. Rumiel Rana

Mr. Baga B.Kattara
Mr. Jorsingh L.Damor
Mr. Nevalabhai V.Bilwal (Navalsingh)
Mr. Thersingh G.Damor
Mr. MR. RAM SINGH BHABHAR
Mr. MR. BAKUL CHANDRA
Mr. Dhumsingh Mesu (Dhumsingh M.Baria)
Mr. Jamsingh C.Damor
Mr. Narsingh D.Baberia
Mr. Ramesh K.Damor
Mr. Badarsingh (Badar D.Dodiyar)
Mr. Kannaiyalal B.Munia
Mr. Lalsingh Garasia
Mr. Velji Damor (William Damor0

Mr. Atarsingh H.Damor (Ethersingh)
Mr. Khemchand Z.Mavi
Mr. Ramesh C.Meida
Mr. Vilsan S.Sangada (Wilson)
Mr. MR. SHANKAR
Mr. MR. BADAMI LAL BARIYA
Mr. Dilipsingh R.Vasunia
Mr. Jorsingh B.Bhuriya
Mr. Gopal Munia (Paul Munia)
Mr. Rameshchandra M.Vasunia (Ramesh)
Mr. Alam kumar Dodiyar (Ellam H.Dodiyar)
Mr. Kanthilal Garasia
Mr. Madiya M.Kadiya

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!***

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்களை பணித்தளத்திலிருந்து தெரிவிக்கிறோம். உங்களுடன் இந்த ஜுலை மாத இதழின் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றும் உள்ளது என்ற வசனத்தின்படி, தேவன் தந்த பரம தரிசன அழைப்பை உறுதிப்படுத்தி, கடந்த 19 வருடங்கள் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு தேவன் கிருபை தந்து வருகிறார். தேவன் நடத்தி வந்த பாதைகளை நினைத்து தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

தேவ கிருபையால் 08.06.2010 செவ்வாய் கிழமையன்று Allahabad Bible Seminary மூலமாக நமது 55 பீல் சுதேச ஊழியர்கள் **B.T.S.,(Bachelor of Theological Studies)** பட்டமளிப்பு விழாவில் பங்கெடுத்து பட்டங்களை கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட பெற்றுக் கொண்டார்கள்.

16.06.2010 அன்று குஜராத்தில் ஜாலோத்தில் உள்ள நம் மிஷன் பங்களாவில் Shalom Charity Mission மூலமாக **Sharon Memorial Clinic** ஆரம்பிக்க தேவன் கிருபை தந்தார். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து டாக்டர். **ஷீஜு** அவர்கள் மருத்துவப் பணிகளை நடத்தவும் மிஷனரி டாக்டராக தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். தொடர்ந்து இந்தப் பணிகளை ஜெபித்துத் தாங்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

நாம் தாங்கி வரும் ஆதிவாசி மாணவர்கள் 10வது, 12வது படிப்பை சிறப்பாக முடித்து அனைவரும் 70% க்கும் அதிகமாக மதிப்பெண்கள் வாங்கியுள்ளார்கள். பீல் ஆதிவாசி பிள்ளைகள் படித்து பாஸ் மார்க் வாங்குவதே ஆச்சரியமாய் இருக்கும் வேளையில், நம் மாணவர்களை தேவன் உயர்த்தியுள்ளது ஆச்சரியமானதே. அற்புத தேவனுக்கே மகிமை!

ஜுலை 1ம் தேதி ஊழியப்பாதையில் 20ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். 20ம் ஆண்டு நம் ஷாலோம் திருமண்டலம் முழுவதிலும் சிறப்பாக ஆசரிக்க உற்சாகப்படுத்தி வருகிறோம். சிறந்த தலைவர்களை உருவாக்கவும், பரிசுத்த ஆவியின் வல்லமையையும், வரங்களும், கனிகளும் சிறந்து விளங்கிடவும், ஒவ்வொரு விசுவாசி குடும்பமும் 20 குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவிக்க அர்ப்பணித்துள்ளார்கள்.

தொடர்ந்து ஜெபித்து ஆதரிக்கும் நீங்கள் யாவரும் 20 பேர்களுக்கு நம் ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்த அன்புடன் வேண்டுகிறேன். மேலும் **Rs.1000/–** செலுத்தி **ஷாலோம் ஊழிய ஆயுள்கால பங்காளர்களாக** மாறும் திட்டத்தில் இணையும்படி அன்புடன்

வேண்டுகிறேன். இந்த நிதியை சிறப்பு வைப்பு நிதியாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம். உங்கள் குடும்பத்தார் அனைவரும் இதில் இணையும்படியாக அன்புடன் வேண்டுகிறேன். மற்ற நண்பர்களுக்கும் ஊழியர்களை அறிமுகப்படுத்துங்கள்.

08.07.2010 அன்று எங்கள் இல்லறவாழ்வில் 25 ஆண்டுகளை முடித்து புது வருடத்தில் நுழைய தேவன் கிருபை தருகிறார். 25 ஆண்டுகள் குடும்பத்திலும், பிள்ளைகள் வாழ்விலும், ஊழியப்பாதையிலும் தேவனே மிகப் பெரியவராக, போதுமானவராக இருந்து எங்களை நடத்தி வந்தார். எங்களை அழைத்து, அபிஷேகித்து, ஊழியப்பாதையில் இம்மட்டுமாய் நடத்தி வந்து பீல் ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக நடத்தி வந்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக! எங்களுடன் இணைந்து எங்களை நேசித்து ஜெபித்துத் தாங்கிய உங்கள் யாவருக்காகவும் தேவனை துதிக்கிறேன். தொடர்ந்து எங்களுக்காக ஜெபித்து, ஊழியங்களையும் எங்களையும் தாங்க அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்ந்து உங்களுக்காவும், பிள்ளைகளுக்காவும் ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் உயர்த்தி ஆசீர்வதிப்பாராக. தூத்துக்குடி அலுவலகம், மற்றும் தாகோத் பணித்தள அலுவலக ஊழியர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**"அவர்களும், அவர்களோடு கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாருப்பார்கள்". (ஏசாயா 65 : 23)**

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,



(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

# பரம தரிசனம்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**



சர்வ வல்லமையுள்ள தேவன் சாதாரண மனிதர்களுக்கு தம்முடைய பரம தரிசனத்தைக் கொடுக்கும் போது அவர்கள் தேவனுக்காக மிகப் பெரிய காரியங்களை செய்கிறார்கள். தரிசனமும் அழைப்பும் பெற்று செய்யப்படும் ஊழியங்களில் பெரிய வித்தியாசத்தை காண முடியும். தேவனே உடன் நின்று ஊழியங்களை நடத்துவதை காணலாம். ஆனால் அநேகர் தேவன் இப்படி தரிசனம் தந்தார் என்று சொல்லி தங்கள் வாழ்வில் ஏமாற்றப்படுவதை, வஞ்சிக்கப்படுவதைக் காண்கிறோம். பலர் ஊழியத்தை ஆரம்பித்துவிட்டு நடத்த இயலாமல் விட்டு விடுவதையும், சோர்ந்து விடுவதையும், வழிவிலகிப் போவதையும் கஷ்டங்கள் அனுபவிப்பதையும் காண்கிறோம். ஒருமுறை டாக்டர். **டி.ஜி.எஸ் தினகரன் ஐயா** அவர்கள் இயேசு அழைக்கிறார் வல்லமை பயிற்சி முகாமில் இவ்வாறு கூறினார்கள். "அநேக ஊழியக்காரர்கள் அநேக கஷ்டத்துடன் பாரத்துடன் ஜெபிக்க வருவார்கள். நான் ஜெபித்து அவர்களுக்கு முடிந்த காணிக்கையை கொடுத்து அனுப்புவேன். ஆனாலும் என் மனம் உடைந்து போகும். ஒரு நாள் நான் இயேசுவை தரிசித்தபோது அவரிடம் நான் பாரத்துடன் கேட்டேன். ஏன் ஆண்டவரே உம்முடைய ஊழியத்தை செய்யும் ஊழியக்காரர்கள் இத்தனை வேதனைப்படுகிறார்கள் என்று கேட்டபோது ஆண்டவராகிய இயேசு சிரித்துக் கொண்டே சொன்னார். நான் இவர்களை ஊழியத்திற்கென்று அழைக்கவே இல்லை. அவர்களே என் பேரில் கொண்ட வைராக்கியத்தினால் நான் அவர்களுக்கு கொடுத்த நல் ஆசீர்வாதங்களை விட்டுவிட்டு ஊழியம் செய்ய வந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் தேவைகளை மட்டும் அவ்வப்போது பூர்த்திசெய்கிறேன். என் சித்தமின்றி காரியங்களை செய்வதால் கஷ்டங்களை அடைகிறார்கள். நான் சர்வவல்லமையுள்ள தேவன் நான் ஒருவனை அழைத்தால் நான் அவருடன் இருந்து பெரிய காரியங்களை செய்வேன். நான் மோசேயோடு இருந்து எப்படி நடத்தினேனோ அப்படியே வழி நடத்துவேன். கனப்படுத்துவேன். தேவைகளை சந்திப்பேன் என்று இயேசு கூறினார் என மிக அழகாக கூறினார்கள். ஆகவே தேவன் தரிசனம் தந்து நடத்தும் ஊழியர்களை அவர் சித்தம் நிறைவேற்ற பயன்படுத்துகிறார்.

தரிசனம் என்றால் ஏதோ தூங்கும்போது நினைவுகளெல்லாம் கலந்து கனவுகளாக வருவதோ அல்லது அர்த்தமற்ற சொப்பனங்களாக காணுவதோ அல்ல. தேவன் தரிசனம் தரும் வேளையில் பரலோகத்தில் வீற்றிருக்கும் அவர் பூலோகத்தில் எதை செய்யவேண்டும் என்று

விரும்புகிறாரோ அதைச் செய்வதற்கு மனிதனைத் தேடி வருகிறார். அவர் திட்டத்தை வெளிப்படுத்தி அவன் மூலமாக நிறைவேற்றுவதற்கு அவனுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார். அதுதான் தேவன் தரும் பரம தரிசனம் பரலோக தரிசனமாகும்.

வேதத்தில் நோவாவுக்கு தரிசனமாகி பேழையை உருவாக்க சொன்னார். ஆபிரகாமை விசுவாசிகளின் தகப்பனாக மாற்ற தரிசனம் தந்தார். சொந்த ஜனத்தை மீட்பதற்கு மோசேக்கு முட்செடியில் தரிசனமானார். புறஜாதிகளை தேவனண்டை நடத்துவதற்கு பவுலுக்கு தரிசனமானார். அதைப்போல் பரிசுத்த ஆவியானாவர் இந்த கடைசி காலங்களில் தம்முடைய நற்செய்தி பணியை நிறைவேற்ற மணவாட்டியாகிய சபையை கட்டி எழுப்பி அவர் வருகைக்கு ஆயத்தமாக்க அநேக ஊழியங்களையும் ஊழியர்களையும் பேர் சொல்லி அழைத்து தம் சித்தத்தின்படி பயன்படுத்தி வருகிறார்.

என் வாலிபப்பிராயத்தில் இந்த உலகத்தில் எனக்கு சமாதானம் இல்லை. என்னை நேசிப்பதற்கு உலகில் யாரும் இல்லை என்ற ஏக்கத்துடன் உலகில் வாழ வேண்டாம் என்று விஷம் குடித்து உயிரை மாய்த்துக்கொள்ள செயல்பட்டேன். ஆனால் தேவ கிருபையினால் உயிர் பிழைத்தேன். ஏன் இன்னும் உயிர் வாழவேண்டும் என்று அலைந்து கொண்டிருக்கும்போது கோவையில் அன்பு போதகர் ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் சபையில் ஞாயிறு ஆராதனையில் தேவன் என்னை தேவதாஸ் என்று பெயர் சொல்லி அழைத்து ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக மாற்றுவேன். அப்போஸ்தல ஊழியத்தை தருவேன் என்று இப்போது நடைபெறும் ஷாலோம் மிஷனெரி பணியை 1980 ஆம் ஆண்டு 30 வருடங்களுக்கு முன்பாக தீர்க்கதரிசமாக கூறினார். 1982 முதல் ஊழியப் பாதையில் தேவன் மிஷனெரியாக பயன்படுத்தினார். 1985–ம் ஆண்டு ஜீலை 8–ம் தேதி (25 ஆண்டுகள்) திருமணமான பின்பு எந்த ஜாதி மக்கள் என்று ஜெபித்தபோது என் மனைவி வஹிதாவுக்கு தேவன் கைகளில் வில், அம்பு வைத்திருக்கும் பீல் ஆதிவாசி மக்களை தரிசனமாகக் காட்டினார். நடுப்பக்கத்தில் இந்த சாட்சியை விவரமாக எழுதியுள்ளோம். எனவே அந்த பரம தரிசனத்தை ஏற்றுக்கொண்டு திருமணமாகி 40 நாட்களில் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக ஒப்புக்கொடுத்தோம். 5 வருடங்களில் இந்திய மிஷனெரி சங்கம் மூலமாக பணிகளை நிறைவேற்றி, தேவ நடத்துதலின்படி, ஷாலோம் ஊழியங்களை 1991–ம் ஆண்டு ஆரம்பித்து, 20 ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை செய்துள்ளார். பரம தரிசனம் தந்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

தரிசனமும், கீழ்ப்படிதலும்: தரிசனங்களை தேவன் தரும்போது பெரிய திட்டங்களை தேவன் அறிவித்தாலும் ஒவ்வொரு அடியாக தேவன் நடத்தி செல்கிறார். அதற்கு கீழ்ப்படிதலை நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கிறார்.

நோவா – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்

ஆபிரகாம் – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்

மோசே – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்

பவுல் – தேவன் தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்

ஒருநாள் மட்டுமல்ல முழு வாழ்க்கைப் பாதையிலும், ஊழியப்பாதையிலும் ஒவ்வொரு கால கட்டங்களில் தேவன் அதை எதிர்பார்க்கிறார். ஆபிரகாம் கீழ்ப்படிந்து தேவன் எவைகளை விட்டுவிட கூறினாரோ அவைகளை விட்டு தேவன் சொன்ன இடத்திற்கே போனார். மட்டுமல்ல அவர் வாழ்வில் தேவனுக்குக் கீழ்ப்படிதலை முதல் காரியமாக வைத்தார். ஒரே பேறான குமாரன் ஈசாக்கை பலியிட சொன்ன போதும் கீழ்ப்படிந்து நடந்தார்.

ஷாலோம் ஊழியப்பாதையிலும் அப்படித்தான். இந்திய மிஷனெரி சங்கம் ஸ்தாபனத்தில் உண்மையாக 5 வருட ஊழியத்திற்குப் பின்பு, தேவனையே சார்ந்து ஜாலோத்தில் ஊழியம் ஆரம்பிக்கும்படி தேவன் கூறினார். ஊழியங்கள் வளரும் போது பீல் சதேச ஊழியர்களை எழுப்ப கூறினார். கீழ்ப்படிந்தோம். இன்று சுமார் 500 பீல் சுதேச ஊழியர்களைத் தந்துள்ளார். அவர்களிடமிருந்து காணிக்கை முழுவதும் வாங்காதே என்று கூறினார். அப்படியே கீழ்ப்படிந்தோம். அவர்களே மிஷனெரி பணிக்கு காணிக்கை கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். வேறு இயக்கத்திற்கு சபை பிரிவுகளுக்கு சபைகளை கொடுக்க வேண்டாம் என்று ஆவியானவர் கூறினார். அதற்கும் கீழ்ப்படிந்தோம். இன்று Shalom Diocese in India வை உருவாக்க தேவன் கிருபை தந்தார்.

ஊழியப்பாதையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவன் எங்களிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தார். நாங்கள் சிறிதளவும் ஐயப்படாமல் கீழ்ப்படிந்த போதெல்லாம் தேவன் அவர் சித்தப்படி ஊழியங்களை வளரச் செய்வதை காணமுடிகிறது. பிரியமானவர்களே, நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். ஒவ்வொரு முறையும் ஆவியானவர் மூலமாக, வசனங்கள் மூலமாக, தேவதாசர்கள் மூலமாக நம்மோடு இடைபட்டு பேசும் போதெல்லாம் அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

### தரிசனமும் விசுவாசமும்

தேவன் தரிசனத்தை கொடுக்கும்போதெல்லாம் நாம் அதை விசுவாசிக்க வேண்டும். விசுவாசிக்கும்போது தேவன் பெரிய காரியங்களை செய்வார். ஆபிரகாம் வாழ்க்கையில் வேதம் சொல்கிறது ***அவன் தேவனை விசுவாசித்தான் அதை நீதியாக தேவன் ஏற்றுக்கொண்டார்.*** ஆபிரகாமின் விசுவாசத்தை ரோமர் 4:17–19 வரை வாசிக்கும்போது நம் தேவன் (1) இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல அழைக்கும் தேவன் (2) மரித்தோரை உயிர்ப்பிக்கும் வல்லமையுள்ள தேவன் என வாசிக்கிறோம். ஒரு பிள்ளைகூட இல்லாதபோது வானத்தின் நட்சத்திரங்களைப்போல வர்த்திக்கப்பண்ணுவேன் என்று வாக்குரைத்த தேவனை ஆபிரகாம் விசுவாசித்தான். வானத்திலுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தன்னை 'அப்பா' 'அப்பா' என்று அழைப்பதுபோல விசுவாசித்தான். அதுபோல தன் சரீரம் செத்துப் போனதையும் மனைவி

சாரான் கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். நம்மில் பலர் செத்துப்போன, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை எண்ணிக் கொண்டிருப்போம்.

உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள். அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து அவனை ஆசீர்வதித்து அவனைப் பெருகப்பண்ணினேன் ஏசா: 51 : 2.

ஆபிரகாம் ஒருவனாய் இருக்கையில் அவனை அழைத்து பெருகப்பண்ணின தேவன் எங்களை ஒரு குடும்பமாக குஜராத்தில் பீல் மக்கள் மத்தியில் அனுப்பினார். 19 வருடங்களில் 500–க்கும் அதிகமான சுதேச ஊழியர்களையும், 500–கும் அதிகமான சபைகளையும் தந்து பல்லாயிரம் குடும்பங்களை இரட்சித்துள்ளார். பழைய சைக்கிளில் பல கிலோ மீட்டர் தூரம் சென்று ஊழியம் செய்த நாட்களை நினைக்கிறேன். உண்மையாக ஊழியம் செய்த எங்களுக்கு தேவன் புதிய சைக்கிளையும், அதைத் தொடர்ந்து 3 வருடங்களில் மோட்டர் சைக்கிளையும், அதன்பின்பு 3 வருடங்களில் ஆர்மடா ஜீப்பையும், அதன்பின்பு 2 நல்ல Bolero வாகனங்களையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். மேலும் இன்று சுமார் 100 சுதேச ஊழியர்கள் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு கிருபை தந்தார். பேய் பங்களாவில் சந்தோஷமாக ஊழியம் செய்துவந்த எங்களுக்கு இன்று நான்கு அழகான பங்களாக்களை மிஷன் ஊழியத்திற்கு வாங்க கிருபை தந்தார். மாத்திரமல்ல மரத்தடியில், குடிசையில் ஆராதனை செய்துக்கொண்டிருந்த கிராம சபை ஆராதனைகளுக்கு 215 இடங்களில் ஆலயங்களை கட்டி முடிக்க கிருபை தந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக 1 குடும்பமாக சென்று 1.7.1991 –ல் ஊழியம் ஆரம்பித்தபோது 2 குடும்பங்கள் ஜெபிக்க வந்தார்கள். இன்று ஷாலோம் திருமண்டலம் உருவாகும் அளவுக்கு பெருகப் பண்ணிண தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

இதுமட்டுமல்ல முழு பீல் மக்கள் இரட்சிக்கப்படவும் 7000 கிராமங்களில் 7000 சபைகளையும், ஊழியர்களையும் தேவன் தந்து ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம். எனக்கன்பானவர்களே, ஷாலோம் ஊழியங்களுக்காக, எங்கள் குடும்பத்திற்காக, பீல் மக்களுக்காக நீங்கள் ஏறெடுக்கும் ஜெபம், தியாகமான ஆதரவு மற்றும் உங்கள் அன்புக்காக தேவனை துதிக்கிறேன். “தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்” என்று அருள் நாதர் இயேசுவின் வார்த்தையின்படி உங்கள் ஒவ்வொரு குடும்பங்களையும், நீங்கள் செய்யும் வேலைகள், தொழில் மற்றும் ஊழியங்களிலும் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை கட்டளையிடுவாராக. தரிசனத்துடன், கீழ்ப்படிதலுடன் விசுவாசத்துடன் ஆவியில் பெலங்கொண்டு முன்னேறுங்கள்.

*தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.*

**“நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்கள் தேவனாயிருப்பேன்”.** எரேமியா 30:22

## ஷாலோம் ஊழியத்தின் 20–ம் ஆண்டு நிறைவு திட்டங்கள் குறித்து மனந்திறந்து உங்களுடன்

### - Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள்...



*பிரியமானவர்களே....* தேவ கிருபையால் அற்பமான ஆரம்ப நாளை தேவன் ஆசீர்வதித்து, 19 ஆண்டுகள் நடத்தி வந்த கிருபைக்காக தேவனை துதிக்கிறோம். பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் சபை ஊழியங்களை தேவனே நடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை.

20–ம் ஆண்டில் பிரவேசிக்கும் போது நாங்கள் குடும்பமாக ஜெபித்தும், மூத்த சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள் இணைந்து ஜெபித்தும், சில காரியங்களை 12 மாதங்களில் செயல்படும் விதமாக ஜெபத்துடன் திட்டமிட்டு வருகிறோம். ஊழியப்பணிகளை பிரித்து சிறந்த தலைவர்களை உருவாக்கி பயிற்சி அளித்தல். நல்ல Net working பண்ணகூடிய நபர்களை இன்னும் இணைத்து திறம்பட செயல்படுத்துதல்.

கீழ்கண்டவாறு அவைகளை பிரித்துள்ளோம்.

**Church Network:- (திருமண்டல பணிகள்)**

குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் Co-ordinators, Area Leaders –களை உருவாக்கி சபை வளர்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சிகளை அனைத்து பீல் விசுவாசி குடும்பங்களையும் பெற வைத்தல். மற்றும் அனைத்துப் பராமரிப்புக்கு பயிற்சி, மற்றும் கிரமமான பணி செய்ய ஒழுங்கு செய்வது.

**பீல் ஆதிவாசி மாணர் கல்வித் திட்டம்:–**

குறைந்தது 10,000 ஆதிவாசி மாணவர்களை கல்வி பராமரிப்புத் திட்டத்தில் இணைந்து ஆசீர்வதித்தல். மருத்துவப்பணி மற்றும் ஆரம்ப சுகாதாரப் பயிற்சிப் பணி, குடிநீர் வசதிகள், மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் Shalom Charity Mission மூலம் நிறுவுதல்

**ஸ்திரப்படுத்துதல் மற்றும் பயிற்சி ஊழியங்கள்:–**

500 ஸ்தல சபைகள் மூலம் / 1000 கிராமங்களில் சபைகள் / விசுவாசிகள் உருவாக்குதல்.

300 கிராம ஆலயங்களை கட்டி முடித்தல் இதுவரை 215 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (85 இன்னும் கட்டப்பட வேண்டும்)

300 சுதேச ஊழியர்களுக்கு பயிற்சி அளித்து, போதகர்களாக அபிஷேகித்து, 300 Area களாக பிரித்து ஊழியங்களை ஸ்திரப்படுத்துதல்.

**Vedio, Audio மூலமாக நற்செய்தி & முன்னேற்றப்பணி :–**

பணித்தளத்தில் Audio / Video மூலமாக ஆதிவாசி கிராமம் சபைகளுக்கு பீலி, பிலோடி, வாகுடி மொழியிலும் ஹிந்தி, குஜராத்தி பாஷையிலும் செய்திகள், பாடல்கள் சபை வளர்ச்சிக்கான திட்டங்களை தயாரித்து 60 Centre-க்கு அனுப்பி அவர்களை காண செய்து பரமதரிசனத்தை நிறைவேற்றுதல். அதுபோல் முனனேற்றப்பணிகளுக்கு Sponsors Network Department–க்கும் Video, Audio equipments கிரமமாக அனுப்புதல். இதற்காக மற்றும் இத்துறையில் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

**மிஷனெரிப்பணியில் நமது தரிசனம் :–**

7000 பீல் கிராமங்களிலும் 7000 சுதேச ஊழியர்களை எழுப்ப வேண்டும் என்ற தரிசனத்தை விட்டு விடாமல், புதிய ஊழியர்களை உருவாக்கி பயிற்சி கொடுப்பது, தொடர் நடவடிக்கைகள் எடுத்து சபைகளை உருவாக்கிய பின்னர் திருமண்டலத்துடன் இணைய வைப்பது, இந்த மிஷனெரி தரிசனத்தை தொடர்ந்து நடத்துவது.

**பணித்தள அலுவலக நிர்வாகம் :–**

Finance / Accounts / மற்றும் Administration அதிக கவனம் செலுத்தி ஊழியங்களை நேர்த்தியாய் நடத்திச் செல்வது.

**தூத்துக்குடி தலைமை அலுவலக நிர்வாகம் :–**

தூத்துக்குடி அலுவலகத்திலும் Communication, Magazine, Finance and Accounts குறிப்பாக Promotional நபர்களை, Prayer Network administration இவைகளை பெலப்படுத்துதல்.

இவைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு 7 ஒருங்கிணைப்பாளர்கள் (Co-ordinators). மேலும் எனக்கு Personal Assistant தேவைப்படுகிறது. இவைகளை எல்லாம் நிறைவேற்றினால் தான் சரியான அஸ்திபாரத்தை உருவாக்க முடியும். 20–ம் ஆண்டு இறுதிக்குள் நல்ல அஸ்திபாரத்தை ஊழியப்பாதையில் உருவாக்கினால் மட்டும் இனி பலுகிப் பெருகும் ஊழியத்தை கட்டிக் காக்க முடியும்.

இதற்காக மாதந்தோறும் ரூ. 500 கொடுத்து ஜெபித்து இந்த தரிசனபணியை தாங்க கூடிய Shalom Mission Partners (ஷாலோம் மிஷனெரி ஊழிய பங்காளர்கள்) 1000 உடனடியாக தேவை. இதன் மூலமாக 1000 கிராமங்களில் ஸ்திர சபைகள் உருவாக்கப்படும்.

இதை வாசிக்கும் நீங்கள் உடனடியாக சில மாதங்களாக இதற்கு ஜெபியுங்கள். குறைந்தது 5, 6 பேருக்கு ஊழியத்தை அறிமுகம் செய்து இணையச் செய்யுங்கள். ஷாலோம் ஊழிய பிரதிநிதியாக இணைந்து நிதி உதவி சேகரித்து அனுப்ப முன்வாருங்கள்.

ஜெபக்குழுவை ஏற்படுத்தி பீல் மக்கள் இரட்சிப்பிற்காக மாதம் ஒருமுறை ஜெபிக்க ஜெபக்குழுத் தலைவர்களாக முன்வாருங்கள். மேலும் விபரங்களுக்கு **சகோ. சாம் குணசீலன்** அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். **செல் : 093456–75468**

## *நமது பணித்தளத்திற்கு*
## ஊழியர்கள் தேவை...

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற நமது குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்ய 5 தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறார்கள்.

1. **ஆதிவாசி குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தை நிர்வகிக்க...**
2. **ஷாலோம் சபைகளை நிர்வகிக்க....**
3. **Media & Communication Director ஆக செயல்பட...**
4. **நிதித் துறையை (Accounts Department) நிர்வகிக்க...**
5. **நமது பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு Personal Assistant ஆக செயல்பட...**

இதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

***தேவன்தாமே உங்களையும் உங்களது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!***

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்."** யோவான் **12:26**

### எங்களுடன் தொடர்பு கொள்ள


| | | |
|---|---|---|
| | **Cell :** | **09377445468 - Bro. V. Devadass,**<br>**09345675468 - Bro. Sam Gunaseelan** |

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu. Phone: 0461 - 2375468

email : info@shalommission.in, Website : www.shalommission.in



*சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுடைய தாயார்*

## திருமதி. கிரேஸ் அருள்ராஜ்.

*அவர்களிடம் ஒரு சிறப்பு பேட்டி...*



***கேள்வி : (சகோ.சாம் குணசீலன்) : ஸ்தோத்திரம்... உங்களைக் குறித்து சொல்லுங்க...***

*பதில்* : ***(திருமதி. கிரேஸ் அருள்ராஜ்) :*** இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் கிரேஸ் அருள்ராஜ். நாசரேத் ஊரில் திரு. மோசஸ் – மார்த்தாள் தம்பதிக்கு பிறந்தேன். எனக்கு தேவன் 3 பெண் பிள்ளைகளையும் 2 ஆண் பிள்ளைகளையும் தந்துள்ளார். அவர்கள் எல்லோரும் குடும்பமாக உள்ளார்கள்.

***கேள்வி : உங்கள் மூத்த மகள் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களை எப்படி எப்போது ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தீர்கள்?***

*பதில்* : என்னுடைய மூத்த மகள் வகிதாவுக்காக நான் தேவனைத் துதிக்கிறேன். என்னுடைய வயிற்றில் அவள் இருக்கும்போதே கர்த்தர் என் தாயார் மூலமாக பெயர் சொல்லி அழைத்து அவள் கர்த்தருடைய ஊழியத்தை செய்வாள். **"நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்."** ஏசா : 62.4. அதன்படி அவளுக்கு **வஹிதா எப்சிபா** என்று பெயர் வைத்தோம். வயிற்றில் உருவான போதே ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்து விட்டேன். மேலும் அவளுக்கு 17 வயதான போது அவள் இழுப்பு வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது காயல்பட்டிணத்தில் நடைபெற்ற **சகோ. மோகன் சி லாசரஸ்** அவர்கள் கூட்டத்தில் பங்கு பெற்றோம். கூட்டத்தில் ஆண்டவரிடத்தில் உம்முடைய ஊழியத்திற்கென்று ஒப்பு கொடுத்த என் மகள் வஹிதாவுக்கு சுகம் கொடுங்க என்று ஜெபித்த போது **சகோ. மோகன் சி லாசரஸ்** அவர்கள் இழுப்பு வியாதியில் வந்திருக்கும் ஒரு வாலிப மகளை தேவன் தொட்டு சுகமாக்குகிறார். என்று சொல்லி ஜெபித்த போது உடனே சுகம் கிடைத்தது, எனது மகளும் ஊழியத்திற்காக ஒப்புக் கொடுத்தாள்.

***கேள்வி : உங்கள் மூத்த மகள் சகோதரி. வகிதா தேவதாஸ் அவர்கள் எப்படி எப்போது மிஷனெரி ஊழியத்திற்கு வந்தார்கள்?***


*பதில்* : என் மகள் சிறு பிள்ளையாக இருக்கும் போதே கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தார்கள். ஞாயிறு பள்ளி, வாலிபர் கூட்டம், விடுமுறை வேதாகமப் பள்ளி, போன்ற ஊழியங்களையும் செய்து வந்தார்கள். அந்த நேரத்தில் IMS ல் ஒரிசா பணித்தளத்திற்கு மிஷனெரிகள் தேவை என்று Rev. காந்தி செல்வின் ஐயா அவர்கள் கூறியவுடன், நான் செல்கிறேன் என்று கூறிவிட்டாள். அதன்படி ஒரிசாவிற்கு சென்றாள்.

***கேள்வி : அந்த நேரத்தில் உங்கள் குடும்ப சூழ்நிலை எப்படியாக இருந்தது?***

*பதில்* : இந்த நேரத்தில்தான் என்னுடைய கணவர் சுகவீனம் அடைந்து வேலைக்கு செல்ல முடியாமல் போய்விட்டது. அப்போதுதான் வஹிதாவிற்கு ஏதாகிலும் வேலை கிடைத்தால் குடும்பத்தை நடத்த இலகுவாக இருக்கும் என்று நினைத்து Telephone Operator வேலைக்கு அனுப்ப பிரயாசப்பட்டோம். அவள் 3 நாட்கள் ஊழிய பயிற்சிக்கு சென்றிருந்த போது அந்த வேலைக்கான ஆர்டர் தபாலில் வந்தது. ஒரு பக்கம் குடும்பத்தில் வறுமை... ஒரு பக்கம் ஊழிய அழைப்பு.... என்ன செய்ய வேண்டும்? என்று தெரியாமல் ஆலயத்தில் சென்று ஜெபித்தேன். கர்த்தர் **ஊழியத்திற்கு அனுப்பு** என்று கூறியவுடன் அந்த வேலைக்கான ஆர்டர் தபாலை கிழித்துவிட்டு **ஆண்டவர் எல்லாம் பார்த்துக் கொள்வார்** என்று கூறிவிட்டு ஊழியத்திற்காக ஒரிசாவிற்கு அனுப்பி வைத்தேன்.

***கேள்வி : இந்த சூழ்நிலையில் உங்கள் மகளுக்கு திருமணம் எப்படி ஒழுங்கானது?***

***பதில்*** : ஒரிசாவில் 1 ஆண்டு காலமாக ஊழியம் செய்து விட்டு வந்தபோது 21 வயதான வஹிதாவிற்கு திருமணம் செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் கையில் ஒரு காசு கிடையாது. கால் பவுன் தங்கம் கூட கிடையாது. இருந்த போதிலும் அவளுக்கு பல இடங்களிலிருந்து பணம் காசு தங்கம் எதுவுமே வேண்டாம்.. பெண்ணை மாத்திரம் கொடுங்கள் என்று பல பணக்காரர்கள் பெரிய இடங்களிலிருந்து கேட்டார்கள். ஆனால் ஊழியக்கார மாப்பிள்ளைக்குதான் என் மகளை கொடுப்பேன் என்று கூறிவிட்டேன். ஒரு நாள் இரவில் ஜெபித்து விட்டு தூங்கும்போது அதிகாலை 3 மணியளவில் தேவன் ஒரு தரிசனத்தைக் காட்டினார். ஒரு மாப்பிள்ளையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இன்னொரு ஒரு மனிதரும் கொண்டு வந்து வீட்டில் விட்டு விட்டு சென்று விடுகின்றனர். அதை என் பிள்ளைகளிடம் சொன்ன போது வந்தவர்களுக்கு காபி கொடுப்பதற்கு கூட நம்மிடம் காசு கிடையாது. திருமணம் காரியம் எப்படி நடக்கும் என்று கூறிவிட்டனர். 7வது நாளில் ஆண்டவர் தரிசனத்தில் காட்டிய அதே மனிதர் **திரு. ஜெல் ஜோசப்** அவர்களும் மருமகன் தேவதாஸ் அவர்களும் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களும் **நண்பர் சுவிஷேச ஜெபக் குழு** ஊழியத்தில் மூலமாக பீகாரில் ஊழியம் செய்வதாக கூறினார்கள். ஆண்டவர் காட்டியதால் உடனே சரி என்று கூறிவிட்டேன். மருமகன் தேவதாஸ் அவர்கள் குடும்பச் சூழ்நிலையும் மிகவும் கஷ்டமாக இருந்த போதும் கூட, கேட்காமலேயே அநேகர் திருமணத்திற்காக உதவி செய்ய முன்வந்தார்கள். தேவன் அற்புதமாக ஒரு குறைவில்லாமல் திருமணத்தை நடத்திக் கொடுத்தார்.



***கேள்வி : திருமணமான 40 நாட்களில் மிஷனெரியாக பணித்தளத்திற்கு எப்படி சென்றார்கள்?***

***பதில்*** : திருமணமான இருவரும் ஜெபிக்கும் போது தேவன் கைகளில் வில் அம்புகளை வைத்திருக்கிற மனிதர்களை தரிசனத்தில் காட்டினார். அதன்படி பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் IMS ஸ்தாபனத்தின் மூலமாக 40வது நாளில் சென்றார்கள். சிறிய பெட்டியில் ஒரு சில பாத்திரங்களையும் ஒரு சில உடைகளையும் கொடுத்து அனுப்பினேன். **அழைத்தவர் உண்மையுள்ளவர்** என்ற விசுவாசத்தோடு ஜெபித்து அனுப்பி வைத்தேன்.

***கேள்வி : ஷாலோம் ஊழியங்கள் எப்படி ஆரம்பிக்கப்பட்டது? அந்த நேரத்தில் மறக்கமுடியாத நிகழ்ச்சி ஏதாகிலும் உண்டா?***

***பதில்*** : 5 ஆண்டுகள் ஆண்டவர் பயிற்சி கொடுத்து தேவன் இந்த ஷாலோம் ஊழியங்களை ஆரம்பிக்கும்படி இரண்டு பேரிடமும் கூறினார். அதன்படி 1991 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில் வகிதாவுக்கு 3 வது பிரசவ காலமாக இருந்தது. அந்த நேரத்தில் பணித்தளத்தில் இருந்தபடியினால் அங்கேயே பிரசவமாகி தேவன் ஒரு அழகான ஷாரோன் என்ற பெண் குழந்தையை கொடுத்தார். ஆனால் மருத்துவ வசதி எதுவும் இல்லாத காரணத்தினால் தேவன் அந்த குழந்தையை எடுத்துக் கொண்டார். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஆறுதல் கூற யாரும் கிடையாது. 100 வருடத்திற்கு முன்னதாக வந்த மிஷனெரியின் கல்லறைக்கு அருகில் குழந்தையை மருமகன் தேவதாஸ் அவர்களே அடக்கம் செய்தார்கள். இந்த பாடுகள் மத்தியில்தான் ஷாலோம் ஊழியங்கள் உருவாகியது.

***கேள்வி : ஷாலோம் ஊழியங்கள் எப்படியாக வளர்ந்தது?***

***பதில்*** : ஊழியத்திற்கென்று அழைத்த கர்த்தர் உண்மையுள்ளவர். ஊழியத்தை உண்மையாக

செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டு பேரும் தங்கள் நேரத்தை முழுமையாக கர்த்தருக்காக பயன்படுத்தினார்கள். தேவன் சொல்லுகிறபடி ஒவ்வொரு காரியத்தை செய்ய ஆரம்பித்தார்கள். அதன்படி சுதேச ஊழியர்களை எடுத்தார்கள். சபைகளைக் கட்டினார்கள். ஊழியங்கள் வளர ஆரம்பித்தது. நான் பணித்தளத்திற்குச் சென்று பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக காணப்படுகிறது.

*கேள்வி : 19 ஆண்டுகள் ஊழியத்தை பார்க்கும் போது உங்கள் உள்ளம் எப்படியாக உள்ளது?*

*பதில்* : 19 ஆண்டுகளாக தேவன் செய்த மகிமையான காரியங்களை பார்க்கும் போது உள்ளம் பூரிப்படைகிறது. சுமார் 435 சுதேச ஊழியர்களையும் 215 கிராம ஆலயங்களையும் 620 இடங்களில் ஆராதனைக் குழுக்களையும் எழுப்பவும், சுமார் 1.5 இலட்ச ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் தேவன் கிருபை செய்துள்ளார். எல்லா மகிமையும் தேவனுக்கே உண்டாகுவதாக.

*கேள்வி : ஷாலோம் திருமண்டலம் உருவாக தேவன் கிருபை செய்துள்ளார்... அதனைக் குறித்து?*

*பதில்* : கடந்த 2009 நவம்பர் மாதம் 20ம் தேதியன்று ஷாலோம் திருமண்டலம் உருவாக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் ஆனந்த் பட்டணத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சென்று பார்க்கவும் தேவன் கிருபை செய்தார். அந்த நாளில் பரலோகம் இறங்கி வந்ததையும் ஆண்டவர் தம்முடைய தேவ தூதர்களோடு இறங்கி வந்ததையும் என் கண்களால் பார்க்க முடிந்தது. மருமகன் தேவதாஸ் அவர்களை கர்த்தர் பேராயராகவும் மற்றும் டாக்டர் பட்டம் பெறவும், 77 சுதேச ஊழியர்களை போதகர்களாக உருவாக்கவும், ஷாலோம் திருமண்டலத்தை ஊருவாக்கவும் ஆண்டவர் உதவி செய்துள்ளார். இன்னும் ஒரு சில ஆண்டுகளில் தேவன் இந்த பீல் மக்களைக் கொண்டு தேசத்தில் பெரிய காரியங்களை செய்வார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

*கேள்வி : மூத்த மகளை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்ததின் நிமித்தமாகவும், மருமகனாக சகோ. தேவதாஸ் அவர்கள் உங்கள் குடும்பத்திற்கு வந்ததின் நிமித்தமாகவும் மற்ற பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்?*

*பதில்* : மூத்த மகள் வஹிதா ஊழியத்திற்கு அனுப்பும் போது நான் தையல் டீச்சராக இருந்தபடியினால் ரூ.150 சம்பளம் வாங்கி குடும்பத்தை நடத்தினேன். ஆனால் ஊழியத்திற்கென்று அனுப்பினதினிமித்தமாக மற்ற 2 பெண் பிள்ளைகளும் ஊழியத்திற்கே சென்றார்கள். 2 ஆண் பிள்ளைகளும் நல்ல வேலையில் இருந்து கொண்டே கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள். எல்லோரையும் தேவன் ஆவிக்குரிய இம்மைக்குரிய ஆசிர்வாதத்தினால் ஆசீர்வதித்துள்ளார். தேவன் கொடுத்த மருமகன் எங்கள் குடும்பத்தின் மகனாகவே இருந்து அனைத்து காரியங்களையும் செய்து வருகிறார்கள். தேவனுக்கே மகிமை!

*கேள்வி : வாசகர்களுக்கு உங்கள் கருத்து?*

*பதில்* : இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பானவர்களே, தேவன் உங்களை அல்லது உங்கள் பிள்ளைகளை ஊழியத்திற்கென்று அழைத்தால் உடனே கீழ்ப்படிந்து மிஷனெரியாக செல்லுங்கள், உங்கள் பிள்ளைகளை மிஷனெரிகளாக அனுப்புங்கள். அதன் மூலமாக நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். மட்டுமல்லாமல் மற்றவர்களும் நம்முடைய தேசமும் ஆசீர்வதிக்கப்படும்.

**“ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் (இயேசு) செய்கிறார்”.** யோபு 5:9




# B.T.S., பட்டமளிப்பு விழா

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஜூன் மாதம் 8–ம் தேதி நமது பீல் சுதேச ஊழியர்கள் 55 பேர் அலகபாத் பைபில் செமினரி (Allahabad Bible Seminary) தபால் துறை வழியாக BTS பட்டம் பெற்றார்கள். (Bachclor of Thelogical Studies) இவர்கள் அனைவரும் 2006–ம் ஆண்டு ABS- ல் B.T.S. பட்டபடிப்பிற்காக இணைந்தார்கள். அனைவரும் வருடத்தில் இரண்டு Semaster முறை பரீட்சை எழுதினார்கள். ஒரு Semester –க்கு 4 பாடங்கள் வீதம் 8 Semester - க்கு 24 பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ளனர். ABS- லிருந்து ஒவ்வொரு Semester - க்கும் தேவையான பாட புஸ்தகங்களை அனுப்புவார்கள் அவற்றை வைத்து நமது Shalom Training Unit-ல் உள்ள Teachers, Anil Chowhan, Bhavsingh Kattara, Jainusingh மற்றும் Vikas Garasiya. அவர்கள் திருமதி. வஹிதா தேவதாஸ் தலைமையில் பாடங்களை நடத்தினார்கள்.

ஜுன் 8–ம் தேதி காலை 11 மணிக்கு பட்டமளிப்பு ஆராதனை ஆரம்பமானது. பட்டமளிப்பு ஆராதனையை ABS - Dean of Students, Rev. Parvesh Sethana அவர்கள் நடத்தினார்கள். அவர்களுக்கு பீல் கலாச்சாரத்தின்படி நடனமாடி வரவேற்பு அளிக்கப்பட்டது. ABS - Principal Rev. Sundararaj தேவ செய்தி அளித்தார்கள். இரண்டு பீல் மாணவர்கள் தங்கள் படிப்பின் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள். Rev. Wilson Sangada மற்றும் Rev. Paul Muniya. Rev. Wilson Sangada அவர்கள் பரி. பவுலின் வாழ்க்கையும், அவருடைய ஊழியபாரமும் எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது என்றும் அவற்றின் மூலம் என் சொந்த ஜனமாகிய பீல் ஆதிவாசிகளின் மேல் மிகவும் பாரம் கொண்டு அவர்களை நித்திய ஜீவ வழியில் நடத்த ஒப்புக்கொடுத்தேன் என்று பகிர்ந்தார். Rev. Paul Muniya மோசே வாழ்க்கையும், ஊழியமும் தன்னை மிகவும் உற்சாகப்படுத்தியதாகவும், மோசே தன் சொந்த ஜனத்தை சாபத்தின் தேசத்திலிருந்து விக்கிரக ஆராதனையிலிருந்து ஆசீர்வாதமான பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்திற்கு வழிநடத்தினதுமல்லாமல், உயிருள்ள ஜீவ தேவனை வணங்க வழிநடத்தினது போல நானும் பாவத்திலும் சாபத்திலும், தரித்திரத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிற என் பீல் ஜனத்தை ஆசீர்வாதமான சாபத்திலிருந்தும், தரித்திரத்திலிருந்தும் விடுதலை தரக்கூடிய இயேசுவிடம் வழிநடத்த ஒப்புக்கொடுத்தேன் என்று சாட்சி பகர்ந்தார்.

அதன்பின் ABS Principal நல்லதொரு தேவசெய்தி கொடுத்து ஊழியகாரர்களையும் வந்திருந்த அனைவரையும் உற்சாகப்படுத்தினார். பிற்பாடு 55 பேருக்கும் பட்டம் அளிக்கப்பட்டது. 55 பேருக்கும் ABS Principal அவர்கள் B.T.S பட்டம் வழங்கினார்கள். Bishop.V.Devadoss அவர்கள் கேடயம் வழங்கினார்கள். அதன் பின்பு Shalom Diocese மூலமாக மூன்று மாநிலங்களிலும் முதல் இரண்டு கூடுதல் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு மெடல்களை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் வழங்கினார்கள். மேலும் நமது ஊழியர் Rev. Wilson Sangada அவர்களுக்கு ABS–ல் தொலை துற கல்வி வழியாக படித்த அனைத்து மாணவர்களிலும் முதலாவதாக வந்ததிற்காக ABS–மூலமாக ரூ.1000–ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

குஜராத், தாகோத், CNI. Presbyter in-charge Dr.Rev. Hamilton Roy அவர்களும் CNI Church - Secratery– அவர்களும் பட்டம் பெற்றவர்களை வாழ்த்தினார்கள். தங்களது போதகர்கள் B.T.S பட்டம் பெறுவதை பார்ப்பதற்கு நமது பீல் விசுவாசிகள் ஆயிரத்திற்கு மேல் வந்து விழாவினை சிறப்பித்தனர். வந்தவர்கள் அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது. நமது SHALOM Diocese -ன் ஊழியம், ஊழியகாரர்கள், விசுவாசிகள் அனைவரும் தனக்கு ஒரு சவாலாக இருந்ததாக தேவ செய்தியில் ABS Principal Rev.Sundararaj கூறினார்கள்.


பட்டம் பெற்ற 55 பேர்களில் அநேகர் 10 வது வகுப்பு கூட தேர்ச்சி பெறாதவர்கள். ஆனால் Bishop. Devadoss & Sis. Vahitha Devadoss அவர்களின் விண்ணப்பத்தை ஏற்று ABS தொலை தூரக் கல்வி மூலமாக B.T.S.படிப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு ABS- நிறுவனத்திற்கு மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். குறிப்பாக பட்டம் பெற்ற 55 ஊழியர்களின் படிப்பிற்காக பண உதவி செய்த **இயேசு விடுவிக்கிறார்** ஊழியங்களுக்காகவும், **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காகவும் நன்றி கூறுகிறோம்.

இன்றும் 400–க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இப்படிப்பட்ட B.T.S. படிப்பில் சேர்ந்து பட்டம் பெற ஜெபியுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் Shalom Diocese in India மூலமாக Shalom Bible Seminary ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. பாதர் பாரியா

இராஜஸ்தான்



இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் பாதர் பாரியா, நான் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் கோய்க்கா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. என்னுடைய பெற்றோர் புற மதத்தைச் சேர்ந்தவர்கள். நான் சாராயம் குடித்தல், கெட்ட நண்பர்களுடன் சேர்க்கை போன்ற பாவங்களைச் செய்து வந்தேன். ஒரு நாள் எனது தாயார் மிகவும் சுகவீனமடைந்தார்கள். மருத்துவர்களிடம் சென்று அதிக செலவு செய்து, மருத்துவம் செய்தும் பலனில்லை. சோர்ந்து போன வேளையில் எங்கள் கிராமத்தில் ஒருவருடைய வீட்டில் இயேசு–வின் கூட்டம் நடைபெறுகிறது என்றும், அங்கு போனால் எனது தாயாருக்கு சுகம் கிடைக்கும் என்றும் கேள்விப்பட்டு அங்கு சென்றோம். அந்தக் கூட்டத்தில் எனது தாயாருக்கு பூரண சுகம் கிடைத்தது. மேலும் எனது தாயார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன்பின் எனக்கு சிறிது நாட்கள் கழித்து தீராத தலைவலி ஏற்பட்டது. நானும் கூட்டத்தில் பங்குபெற்றபோது சுதேச ஊழியர் எனது தலையில் கைவைத்து எனக்காக ஜெபித்தபோது தீராத தலைவலி என்னை விட்டு நீங்கிற்று. தேவனுக்கே மகிமை.

அதன் பின் நானும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசியானேன். தேவன் என்னை பரிசுத்த ஆவியால் அபிஷேகித்து ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பை ஏற்று ஷாலோம் குறுகிய கால வேதாகம பயிற்சி பெற்று ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து ஊழியத்தை குடும்பமாக நிறைவேற்றி வருகிறோம். எங்களுக்கு மூன்று முறை குழந்தை பிறந்து இறந்து விட்டது. ஆனால் தேவன் அந்த சாபத்தையும் நீக்கி எங்களுக்கு தற்போது ஐந்து பெண் குழந்தைகளைத் தந்துள்ளார். எங்கள் மூலமாக 70க்கும் அதிகமான சுதேச ஊழியர்களையும், அவர்கள் மூலமாக 80க்கும் அதிகமான சபைகளையும் தேவன் எழுப்பியுள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! எங்கள் ஊழியங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Bennet Yesudass,** Tuticorin.

# தேவ நாமம் மகிமைப்பட இல்லறவாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு

தாயின் கர்ப்பத்தில் உருவாகும் முன்னே தெரிந்து கொண்டு அழைத்த தேவன் ஒரு ஜாதி மக்களை உனக்கு தருவேன் என்று வாக்கு கொடுத்து, 1982–ம் ஆண்டுமுதல் மிஷனெரியாக தேவன் FMPB–ல் பயன்படுத்தி வந்தார். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி 1985–ம் ஆண்டு ஜுன் 8–ம் தேதி IMS–ல் ஒரிசாவில் மல்க்கண்கிரி பணித்தளத்தில் பணியாற்றி கொண்டிருந்த சகோதரி. வஹிதாவை திருமணம் செய்ய தேவன் கிருபை தந்தார். திருமணமாகி 1 வாரமாக எங்கள் சாட்சிகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டோம். அந்த நாளில் தேவன் என் மனைவி வஹிதாவுக்கு கைகளில் வில் அம்புகளை வைத்துக் கொண்டு மலைகளில் அலைகிற ஜனங்கள் மத்தியில் நாங்கள் இருவரும் வேதத்தை கைகளில் ஏந்திக் கொண்டு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தைக் கண்டு என்னிடத்தில் அறிவித்தாள். இவர்கள் யார் என்று சிந்தித்த நாட்களில் திருநெல்வேலி IMS அலுவலகத்தில் பொதுக்காரியதரிசி Rev.S. மாணிக்கம் அவர்களிடம் ஜெபித்து ஆசீர்வாதம் பெற வந்த போது பீல் மக்கள் குறித்த விபரங்களை காட்டினார்கள். இந்த பீல் மக்கள் மத்தியில் முன்னோடி (முதல்) மிஷனெரியாக செல்வதற்கு உங்களை போன்ற தம்பதியர் தேவை என்பதை கூறினார்கள். அப்போது நாங்கள் இருவரும் ஜெபித்து தேவன் தந்த பரமதரிசனத்தை அழைப்பாக ஏற்றுக்கொண்டு, திருமணமாகி 40 நாட்களில் IMS-ல் துதியா பணித்தளத்தை ஆரம்பித்து, 5 வருடங்கள் நற்செய்தி பணியாற்றவும், 5 சுதேச ஊழியர்களை எழுப்பபவும், 3 ஆலயங்களை கட்டி முடிக்கவும். சுமார் ஆயிரம் ஆத்துமாக்களை தேவனண்டை வழிநடத்தவும் கிருபை தந்தார்.

அதன்பின்பு, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட, கிராமங்கள் தோறும் சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட தேவன் தந்த தரிசனப்பணியே அன்பு பகிர்வு இயக்கமாகும். 1991–ம் ஆண்டு ஜுலை மாதம் 1–ம் தேதி முதல் துதியா பணித்தளத்திலிருந்து 40Km-ல் ஜாலோத் தாலுகாவை மையமாக கொண்டு நம் ஊழியங்களை ஆரம்பிக்க தேவன் கிருபை தந்தார். தேவன் தந்த ஆலோசனையின்படியே, IMS பணித்தளத்தில் அனைத்து ஆத்துமாக்கள், சபைகள், ஊழியர்கள் மற்றும் அனைத்து உடைமைகளையும் நேர்த்தியாக ஒப்படைத்துவிட்டு, ஜாலோத் ஊரில் தேவன் தந்த ஒரு பேய் பங்களா என்றழைக்கப்பட்ட ஒரு வீட்டில் அற்பமாக ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டது. ஆவியானவரின் வழி நடத்துதலின்படி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட சிறிய ஜெபக்கூடுகையில், இரு குடும்பத்தினர் பங்கு பெற்றார்கள். பிசாசின் பிடியிலும், நோயிலும் அவதிப்பட்ட அந்த இரு குடும்பத்தினரும் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்றார்கள். அவர்கள் மூலமாக ஆத்துமாக்கள் மேலும் மேலும் வர ஆரம்பித்தார்கள். இந்த நேரத்தில் சுமார் 500–க்கும் அதிகமான ஆதிவாசி ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு வந்தபடியால், மேற்கொண்டு அநேகரை கொண்டு வர தேவன் பீல் சுதேச ஊழியர்களை எழுப்ப ஆலோசனை தந்தார், அந்த ஆலோசனையின்படி இதுவரை சுமார் 500–க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பவும் 500–க்கும் அதிகமான பீல் திருச்சபைகளை ஸ்தாபிக்கவும், தேவன் கிருபை தந்துள்ளார். கடந்த 25 ஆண்டுகளும் தேவன் எங்களை குடும்பமாக இந்த பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக வைத்து பயன்படுத்தி வருகிறார். Shalom Diocese in India திருமண்டலம் உருவாகும் அளவிற்கு தேவன் வழிநடத்தி வந்துள்ளார்.



இல்லறவாழ்விலும், ஊழியப்பாதையிலும் அழைத்த தேவன் உண்மை உள்ளவராக நடத்தி வந்த கிருபைக்காக தேவனை துதிக்கிறோம். தேவன் எங்களுக்கு Titus (MBA II year) Shalom B.Tech (Media) IVth year மற்றும் Shekinah +2 (முடித்து மருத்துவ படிப்பிற்கு ஆயத்தமாகிறாள்) ஆகிய மூன்று பிள்ளைகளை தேவன் தந்து ஆசீர்வதித்துள்ளார். தேவன் எங்கள் பிள்ளைகளையும் மிஷனெரி பிள்ளைகளாய் வளர்த்து தந்துள்ளார். தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

மேலும் ஊழியப்பாதையிலும், எங்கள் குடும்பத்தையும் நேசித்து, ஜெபித்து ஆலோசனைகளையும், ஆதரவையும் தந்து வரும் பரிசுத்தவான்கள், சுவிசேஷகர்கள், சபை போதகர்கள், தேவ ஜனங்கள் மற்றும் ஷாலோம் பிரதிநிதிகள் மற்றும் Shalom Board Memebers யாவருக்காகவும் தேவனை துதிக்கிறோம். விசேஷமாக தேவன் தந்த ஆவிக்குரிய தகப்பனாக வழிநடத்தி நேசித்து வந்த அன்பு Dr.D.G.S. தினகரன் (Jesus Calls)அவர்கள் மற்றும் ஷாலோம் ஊழியத்திற்கும் பீல் மக்களுக்கும் ஆசீர்வாதத்தின் பாத்திரமாக உள்ளவரும் அன்பு சகோ. மோகன் சி. லாசரஸ் (Jesus Redeems) அவர்களையும், என்னுடைய ஆவிக்குரிய தகப்பனாக வழிநடத்தி இன்று வரை அரவணைத்து வரும் Pas. Joel Anantharaz (Apostalic Prayer House) அவர்களுக்காகவும் தேவனை துதிக்கிறேன்.

இனிவரும் வருடங்களில் முழு பீல் மக்கள் இரட்சிக்கப்படவும் 7000 கிராமங்களில் 7000 பீல் சுதேச ஊழியர்கள் எழுப்பவும் கல்வி, மருத்துவம், பொருளாதாரம் உயர்த்தப்பட்டு, பீல் திருச்சபைகள் தேசத்திற்கும் உலகத்திற்கும் வெளிச்சமாகவும், சாட்சியாகவும் விளங்கவும், எங்கள் குடும்பத்தை தேவன் தொடர்ந்து பயன்படுத்தவும், எங்கள் பிள்ளைகளும் தேவமகிமைக்கு ஆசீர்வாதமாக விளங்கவும் ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம். குறிப்பாக எங்களது திருமண நாளான 08.07.2010 அன்று விஷேசமாக ஜெபித்து ஆசீர்வதிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

எங்களையும் ஷாலோம் ஊழியங்களையும் நேசித்து இதுவரை ஜெபித்து தாங்கிய உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றிகளை இயேசுவின் நாமத்தில் கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!. ஆமென்!

# Sharon Memorial Clinic

Run by Shalom Charity Mission

# திறப்புவிழா





Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்





பாடல் மற்றும் ஆராதனை வேளை





Rev. பால்முனியா மற்றும் Rev. சுரேஷ் ஆகியோர் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கின்றனர்.




டாக்டர் ஷிஜு அவர்களுக்கான
விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.



முதல் மருத்துவ சிகிச்சை

# SHARON MEMORIAL CLINIC

## by Shalom Charity Mission



குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் பெரும்பாலான ஆதிவாசி கிராமங்களில் மருத்துவ வசதிகளோ, சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளோ கிடையாது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூட கிடையாது. நல்ல மருத்துவ உதவி தேவையென்றால் ஏறத்தாழ 40Km தூரம் வரை செல்ல வேண்டும். அப்படிச் சென்றாலும் ஏற்ற நேரத்தில், ஏற்ற விதத்தில் மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை. இவர்களுக்காக நமது ஷாலோம் ஊழியத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் மருத்துவ முகாம்கள் நடத்தி வருகிறோம். சுமார் 5000 மக்கள் பயன்பெறுவார்கள். ஆதலால் நமக்கு ஒரு சொந்த மருத்துவமனை ஆரம்பித்தால் அநேக ஏழை ஆதிவாசி மக்கள் பயன் பெறுவார்களே என்பது நம்முடைய பாரமாக இருந்தது.

ஆண்டவர் நமது ஜெபத்தைக் கேட்டு கடந்த ஏப்ரல் மாதம் Dr. Shiju M. Selvister அவர்களை நமக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் மூலம் 3 மாநிலங்களிலும் அநேக இடங்களில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் அநேக தேவையுள்ள மக்கள் நன்மைகள் பெற்றுக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் அநேக கிராமங்களைப் பார்வையிடவும் செய்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த பாரம் மனவாஞ்சையின்படி சுமார் 1 வருடம் மருத்துவ உதவி செய்ய அர்ப்பணித்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை.

இப்பணியில் உதவி செய்ய ஆண்டவர் 2 செவிலியர்களையும் 2 உதவியாளர்களையும் தந்திருக்கிறார். தேவன் தந்த இந்த புதிய மைல்கல்லுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

### ஜெபியுங்கள்

1. நமது Dr. Shiju M. Selvister அவர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.
2. கொடுக்கப்படும் மருந்து மாத்திரைகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
3. சுற்றிலும் உள்ள தேவையுள்ள நோயாளிகள் வந்து பயன்பெற ஜெபியுங்கள்.
4. தேவையான உபகரணங்கள் கிடைக்கவும்,
5. மாதந்தோறும் இதன் தேவை ரூ. 25000/- கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

இந்த மருத்துவப்பணி Shalom Charity Mission மூலம் தாங்கப்பட்டு வருகிறது.

இதை வாசிக்கின்றவர்கள் மருத்துவதுறையில் பணிபுரிபவர்கள் உங்களின் உதவிகளையும், ஆதரவுகளையும் ஆலோசனைகளையும் எங்களோடு பகிர்ந்து கொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். மேலும் கர்த்தரால் ஏவப்பட்டவர்கள் இம்மருத்துவப்பணிக்காக ஜெபிக்கவும், தாங்கவும் முன்வருமாறு வேண்டிக் கொள்கிறோம். இந்த திட்டத்திற்காக எங்களோடு தொலைபேசியிலோ அல்லது email முகவரியிலோ தொடர்புகொள்ள மறவாதிருங்கள்.

*நமது பணித்தளத்தில் மருத்துவ ஊழியம் செய்துவரும்*

## ***Dr. Shiju M. Selvister*** அவர்களின் சாட்சி



ஆண்டவரின் பெரிதான கிருபையால் என்னைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய பெயர் Shiju M. Selvister, கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளியாடி என்ற இடத்தில் 1984–ம் ஆண்டு திரு. மாணிக்கராஜ் – திருமதி. ஏஞ்சல் சுகுனாபாய் என்ற தம்பதியருக்கு இளைய மகனாகப் பிறந்தேன். எனது மூத்த சகோதரன் ஒரு பொறியியல் (Engineer) வல்லுனராக பணிபுரிந்து வருகிறார். தென்னிந்தியத் திருச்சபையில் அங்கத்தினராக உள்ள நல்ல குடும்பத்தில் பிறந்து ஆண்டவருக்குள் வளர்க்கப்பட்டேன்.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு மார்த்தாண்டம் என்ற இடத்தில் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற ஒரு மிஷனெரி கூட்டத்தில் கலந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்தக் கூட்டத்தில் பீல் ஆதிவாசி மக்களைக் குறித்தும் அவர்கள் செய்துவரும் காரியங்களைக் குறித்தும், அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளைக் குறித்தும் கேள்விப்பட்டேன். மேலும் பீல் ஆதிவாசி மக்கள் வியாதிப்படும்போது மருத்துவ வசதிகள் குறைவினால் அல்லல்படுவதைக் கேட்டு எனக்குள் மிகுந்த பாரம் உண்டாயிற்று. நான் இவ்வாறாக யோசித்தேன் : “ஒருவேளை என்னால் மருத்துப் படிப்பு (MBBS) படிக்க முடிந்தால், ஷாலோம் ஊழியங்கள் நடைபெறும் பணித்தளத்திற்குச் சென்று இந்த மக்களுக்கு மருத்துவ உதவி செய்வேன்”– என்று ஆண்டவரிடத்தில் பொருத்தனையும் செய்து கொண்டேன். எனக்குள் பாரம் உண்டானதே தவிர ஷாலோம் ஊழியங்களைக் குறித்து என்னால் முழுமையாக அறிந்து கொள்ளமுடியவில்லை. நாளுக்கு நாள் மருத்துவம் படிக்க எனக்குள் ஆசை அதிகமானது. எவ்வளவோ முயற்சி செய்தும் எனக்கு மருத்துவம் படிக்க இடம் கிடைத்தபாடில்லை. மேலும் எனது குடும்பத்தில் 7 நபர்கள் பொறியியல் வல்லுனர்களாக இருந்தபோதிலும் 8 வது நபராக பொறியியல் படிக்கத்தான் எனக்கும் இடம் கிடைத்தது. எப்படியோ எட்டு மாதங்கள் முடிந்துவிட்டேன். ஆனால் 8 மாதங்களுக்குப் பிறகு தேவ சித்தத்தின்படி மருத்துவம் படிக்க தேவன் கிருபை செய்தார். உடனே மருத்துவம் படிக்க (MBBS) வந்துவிட்டேன். ஆண்டவரின் தயவால் நானும் அநேக காரியங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றேன்.

இந்த வேளையில் என்னுடைய இரண்டாம் வருட மருத்துவ படிப்பின் போது எனது

நண்பர்கள் மூலம் சகோதர் தேவதாஸ் அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். ஷாலோம் ஊழியங்களைக் குறித்து அதிகமாய் அறிந்து கொண்டேன். மேலும் எனது மருத்துவ வாஞ்சையும், இந்த பீல் மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்ற ஏக்கமும் எனக்கு அதிகமானது. ஆகவே எனது பொருத்தனையும் உறுதியானது.

நான் ஷாலோம் பணித்தளத்திற்கு வந்து பார்த்ததும், கேட்டதும் என்னை அதிகமாக பாதித்தது. இங்குள்ள பீல் ஆதிவாசி ஜனங்கள் ஆரோக்கியக் குறைபாடுள்ளவர்களாய் இருக்கின்றார்கள். தாங்கள் சுகவீனப்படும்போது மருத்துவமனை செல்வதைக் காட்டிலும் மாந்திரீகத்தைத்தான் அதிகம் நாடுகிறார்கள். நோய் முற்றிப்போன நிலையில்தான் மருத்துவமனை செல்கிறார்கள். ஏனென்றால் பண வசதி குறைவு, மூட நம்பிக்கைகள், போதுமான மருத்துவமனைகளோ, மருத்துவர்களோ இல்லாத அவல நிலை இவைகள் தான் காரணம். மேலும் பீல் ஆதிவாசி மக்கள் ஆரம்ப சுகாதாரத்தைக் குறித்து போதுமான அறிவும் இல்லாமல் இருக்கின்றார்கள். இவர்களுக்கு நல்ல மருத்துவமனைகள் மற்றும் நல்ல மருத்துவர்கள் கிடைத்தால் இவர்களுடைய சுகவீனங்கள் நீங்கி சுகமாய் இருப்பார்களே. இக்காரியங்கள் என்னை மேலும் பாரப்படுத்தியது.

தற்போது ஷாலோம் ஊழியத்தின் மூலம் ஜாலோத் என்ற இடத்தில் **15.06.2010** செவ்வாய்கிழமை அன்று புதிதாக திறக்கப்பட்டுள்ள **"ஷாரோன் நினைவு மருத்துவமனை" (Sharon Memorial Clinic) –**ஐ குறித்து தேவனுக்குள் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நமது மருத்துவமனையின் மூலம் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலத்தில் உள்ள நமது ஊழியர்கள் குடும்பங்கள் பயனடையக்கூடும். விசுவாசிகளும் பயனடையக்கூடும். குறைந்த செலவில் மருத்துவம் பார்த்துக் கொள்ளவும் முடியும். மேலும் நோய் நொடியோடு வருகிறவர்கள் ஆண்டவரை அறிந்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். சரீர சுகத்தோடு, ஆத்மீக சுகத்தையும் பெற்றுக் கொள்வார்கள். இந்த மருத்துவமனை பீல் ஆதிவாசி மக்களுக்கு மட்டுமல்லாமல் வரும் அனைவருக்கும் ஆண்டவரின் அன்பை எடுத்துச் சொல்லும் ஓர் கருவியாகவும் செயல்படும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

தேவன்தாமே இவ்வூழியத்தைச் செழிக்கச் செய்து, வளரச்செய்து, ஓர் நிழல் தரும் நிழற் கூடாரமாய் மாற்ற எனது ஜெபமும், சேவையும் என்றும் தொடரும். மேலும் எனக்காகவும் எனது மருத்துவ ஊழியத்திற்காகவும் மற்றும் எனது குடும்பத்திற்காகவும் ஜெபிக்க அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

தேவ பணியில்

**Dr. Shiju M. Selvister**

# ஜெபக்குறிப்புகள்

**பீல் மக்கள்**

✞ பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Sharing Love Mission**

✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Diocese in India**

✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Charity Mission**

✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஊழியத் தேவைகள்**

✞ இந்த ஜுலை மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**20 வது ஆண்டு**

✞ நமது ஷாலோம் ஊழியங்கள் 19 ஆண்டுகளை முடித்து 20வது ஆண்டுக்குள்ளாக கட்டுந் வரதேவன் கிருபை செய்துள்ளார், தேவனுக்கே மகிமை! இந்த 20வது ஆண்டிம் அதற்குப் பிறகும் தேவ கரம் ஊழியத்துடன் இருந்து ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**20 வது ஆண்டு திட்டங்கள்**

✞ நமது ஷாலோம் ஊழியங்களில் 20வது ஆண்டில் நிறைவேற்றும்படியாக தேவன் தந்துள்ள அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்ற தேவன் நல்ல கிருபைகளையும், ஞானத்தையும் தர ஜெபியுங்கள்.

**எழுப்புதல் பெருவிழா**

✞ வருகின்ற ஆகஸ்ட் 13,14&15 (வெள்ளி, சனி & ஞாயிறு) ஆகிய மூன்று தினங்களும் சத்தியமங்களத்தில் **சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்** செய்தியளிக்கும், எழுப்புதல் பெருவிழாவில், தேவனுடைய பாதுகாப்பு இருக்கவும். கூட்டங்கள் சிறப்பாக நடைபெறவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

# பீல் ஆதிவாசி மாணவர் கல்வி திட்டம்

தேவ கிருபையினால் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 19 ஆண்டுகளில் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவப் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளிலிருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள், தங்கள் பிள்ளைகள் தங்களுடைய பழைய பாவ வாழ்க்கையைப் போல வாழ்ந்துவிடக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்ற வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | – 560 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | – 90 |
| 3. | ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் | – 30 |
| 4. | ஷாலோம் விடுதி அந்தர்வேலியா, மத்தியபிரதேசம் | – 25 |
| 5. | ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் | – 25 |
| 6. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | – 220 |
| | மொத்த பிள்ளைகள் | – 950 |

ஆகவே கீழ்க்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

- ✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.
- ✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.
- ✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.
- ✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.
- ✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 300 புதிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2010 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2010ம் ஆண்டு ஜுலை மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. இதுவரை ரூ. 1,35000/– கிடைக்கப்பெற்றுள்ளோம். மீதி தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.



## 20ம் ஆண்டு ஊழிய வளர்ச்சி திட்டங்கள்

- 1000 சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்சி கொடுத்து உருவாக்குதல்.
- 1000 சபைகளை உருவாக்குதல்
- 1000 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவுக்காக உதவுதல்
- 5000 வேத புத்தகங்களை 5000 விசுவாசக் குடும்பங்களுக்கு வழங்குதல்
- 300 புதிய சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல்
- ஆவிக்குரிய பயிற்சி திட்டங்கள்.
- 10,000 மூப்பர்களுக்கு சிறப்பு முகாம்கள்
- புதிய சுதேச ஊழியர்களுக்காக 1 மாத பயிற்சி (40x12)
- மூத்த ஊழியர்களுக்கான B.Th., மற்றும் 1 வருட வேதபாட திட்டங்கள்.
- 3000 வாலிபர்களுக்கான முகாம்கள் நடத்துதல்
- 20,000 பிள்ளைகளுக்கு VBS பயிற்சி மற்றும் Sunday School பயிற்சிகள்
- பெண்கள் எழுப்புதல் முகாம்கள்
- மூத்த தலைவர்களுக்கான (ஊழியர்கள்) சிறப்பு பயிற்சி முகாம்கள்.
- நற்செய்தி கூட்டங்கள், எழுப்புதல் கூட்டங்கள் நடத்துதல்
- சுதேச ஊழியர்கள் குடும்ப அக்கினி முகாம்கள்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் பீலி மொழியில் ஆடியோ & வீடியோ வெளியிடுதல்.

மற்றும் பல

இதன் மூலமாக 1000 கிராமங்களில் 1000 ஸ்திர ஸ்தல சபைகளை உருவாக்கி குறைந்தது 3 லட்சம் ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்த வேண்டும் என்ற தரிசனத்துடன் செயல்படுகிறோம். வாருங்கள் எழுந்து கட்டுவோம்! ஜெபிப்போம் செயல்படுவோம்!

மேற்கண்ட பயிற்சிகளை ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு மாநிலத்திலும் அளிக்க வேண்டும். பயிற்சி கொடுக்கக்கூடிய முதன்மை பயிற்சியாளர்களை உருவாக்க வேண்டும். இவைகளை நடத்துவதற்கு இடவசதி, தங்கும் வசதி, உணவு வசதி, பிரயாணச் செலவுகள் மற்றும் தேவையான உபகரணங்கள் போன்ற காரியங்களுக்கு அதிகமான நிதிஉதவி தேவை. சுதேச ஊழியர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கிவிட்டு இவைகளை விட்டுவிட்டால்

ஊழியங்கள் வளர முடியாது. தரிசனத்தை நிறைவேற்ற இயலாது.

தற்போது தேவன் தந்த 500 கிராமங்கள் திட்டத்தை நிறைவேற்ற மாதந்தோறும் சுமார் ரூ. 2,50,000/– தேவைப்படுகிறது. மிஷனெரிகளைத் தாங்க, ஆதிவாசி மாணவர்களைத் தாங்க, வேதபுத்தகங்கள், சைக்கிள்கள் வாங்க, மேலும் ஆலயங்கள் கட்டுவதற்குக்கூட தாராளமாக காணிக்கை அனுப்புவோர் ஏராளம். ஆனால் மேற்கண்ட பயிற்சி ஊழியங்களை நடத்தி ஊழியங்களை வளர செய்யவும், மேலும் தலைமை அலுவலகம், பணித்தள அலுவலக நிர்வாகத்திற்கான செலவுகளை பொறுப்பெடுக்க வரும் காணிக்கையோ மிகக் குறைவு. ஆகவே மாதந்தோறும்

**ரூ. 500/– கொடுத்து தாங்கக்கூடிய 500 கிராம ஊழிய ஆதரவாளர்கள்**

(அல்லது)

**ரூ. 1000/– மாதந்தோறும் கொடுத்துத் தாங்கக்கூடிய 250 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் (Shalom Mission Partners) தேவை.**

இதை வாசிக்கும் எனக்கு அன்பானவர்களே, நீங்கள் துரிதமாக இத்தேவையை சந்திக்க உதவுங்கள். ஒவ்வொரு பங்காளர்களும் குறைந்தது ஒரு கிராம ஊழிய ஆதரவாளர்களை அல்லது ஒரு மிஷனெரி ஊழிய பங்காளரையாவது அறிமுகப்படுத்தினால் தரிசனப் பணிளை விரைந்து செயல்படுத்த ஏதுவாக இருக்கும்.

**_NET TRANSFER_ மூலமாக காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **Internet** உதவியோடு **NET TRANSFER** மூலமாக காணிக்கை அனுப்பிய பின்பு உடனடியாக எங்களுக்கு காணிக்கை அனுப்பிய அனைத்து விபரங்களையும் ஈ–மெயில் மூலமாகவோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்த மிக அன்பாயக் கேட்கிறோம். நீங்கள் தெரிவிக்கத் தவறினால் காணிக்கை அனுப்பியது யார் என்பது தெரியாமல்கூட போக வாய்ப்புள்ளது. ஆகவே தயவு கூர்ந்து தகவல்களைத் தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது எங்களுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும், உங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதம் உடனடியாக அனுப்பவும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**email : info@shalommission.in, Cell : 9345675468**

# ஜான் சுங்



மிஷனெரி முன்னோடிகள்

**ஜாண் சுங்** (John Sung) சீன தேசத்தில் பியூஜியன் மாவட்டம், ஹிங்வா என்ற கிராமத்தில் 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் நாள் பிறந்தார். இவர்தான் பின் நாட்களில் சீனாவில் எழுப்புதல் அலை பரவ காரணமாக இருந்தார். இவரது தகப்பனார் போதகர் சுங். இவர் மெதடிஸ்ட் சபை போதகராக இருந்தார். போதகர் சுங்கிற்கு 10 பிள்ளைகள் பிறந்தார்கள். தனது பெரிய குடும்பத்தை குறைந்த வருவாயைக் கொண்டு போஷிக்க வேண்டியதாயிருந்தது. சிறுவனான சுங் தனது தகப்பனாரின் பிரசங்கத்தினால் தொடப்பட்டு, ஆண்டவரை நேசித்து வேத வசனங்கள் வாசிக்க ஆரம்பித்தான். ஜெபிக்கும் வாஞ்சையை பெற்றுக் கொண்டான். தனது தந்தை இல்லாத நேரங்களில் சபையை நடத்தி தந்தையின் ஊழியத்தில் மிக உதவியாக இருந்தான், எனவே இவரை "குட்டிப் போதகர்" என்று அழைப்பதுண்டு. அப்பொழுது அவருக்கு 13 வயதிருக்கும். பள்ளியில் முதல் மாணவனாக தேர்ச்சி பெறுவார். இவ்வேளையில் போதகர் சுங் இவரது பெயரை ஷாங் ஜீ என்று மாற்றினார்.

1920ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக அமெரிக்கா அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு வெஸ்லியன் ஓஹியோ பல்கலைக்கழகத்திலும், ஓஹியோ மாநில பல்கலைக்கழகத்திலும் பயின்று 5 வருடங்களில் வேதியலில் முனைவர் பட்டம் பெற்றார். முதுகலையில் பயின்ற 300 மாணவர்கள் உள்ள அக்கல்லூரியில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்று தங்கப்பதக்கம் பெற்றார். அவரை அமெரிக்க செய்தித்தாள்கள் அனைத்தும் பாராட்டின.

இந்தவேளையில் பணி செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் வந்தது. ஆனால் இவரோ தன்னை ஆண்டவருக்காக அர்ப்பணித்திருந்தபடியால், இயேசுவுக்காக ஊழியம் செய்ய தீர்மானித்து, 1926ஆம் ஆண்டு நியூயார்க்கிலுள்ள ஐக்கிய இறையியல் கல்லூரியில் சேர்ந்தார். இக்கல்லூரி வாழ:வில் ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு ஜெப வேளையில், (1972 பிப்பரவரி 10) ஆவியானவர் தண்ணீரைப் போல் மலையுச்சியிலிருந்து தலைமீது ஊற்றப்படுவதைப்போல உணர்ந்தார். தொடர்ச்சியாக ஆவியானவர் அருள் அலை அலையாக பிரவாகித்து வந்ததை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. தனது பாவங்களெல்லாம் படமாக காட்சியளித்தது. அவைகள் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படுவதை உணர்ந்தார். முழுவதுமாக கழுவும்படி ஆண்டவரின் இரக்கத்திற்காக கெஞ்சினார். கடைசியாக உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்ற சத்தத்தைக் கேட்டார். அதன்பின் எல்லையில்லாத சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டார். அதுமுதல் யோவான் ஸ்நானகனைப் போல இயேசுவுக்காக வழியை ஆயத்தப்படுத்த அர்ப்பணித்த தன் பெயரை ஜாண் சுங் என்று வைத்துக் கொண்டார். சுங் சிறுவயது முதலே ஆண்டவரை அறிந்து ஏற்றுக்கொண்டு தன்னை அவருடைய பணிக்காக அர்ப்பணித்திருந்தபோதிலும், பரிசுத்த ஆவியினால் நிரப்பபப்பட்ட இந்த அனுபவத்தை தனது **"ஆவிக்குரிய பிறந்தநாள்"** என குறிப்பிடுகிறார். அதன்பிறகு அவ் இறையியல் கல்லூரியில் இவருடைய பிரசங்கத்தின் மூலம் அநேகர் தொடப்படுவதை உணர்ந்தார். இவருடைய இந்த அனுபவத்தை தவறாகப் புரிந்துகொண்ட

கல்லூரி நிர்வாகத்தினர் இவருக்குத் தெரியாமலே வரை ஒரு மனநோய் மருத்துவ மனையில் சேர்த்து விட்டனர். அங்கு அவர் ஜெபிப்பதிலும், வேதத்தை வாசிப்பதிலும் நேரத்தை செலவிட்டார். 40 முறை வேதாகமத்தை வாசித்து முடித்தார். மருத்துவமனையில் 193 நாட்கள் இருந்தபின் ஆகஸ்ட் 1927ல் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட ஜாண் சுங் தனது சொந்த தேசமான சைபாவுக்கு ஏறக்குறை 8 வருடங்ளுக்குப் பின் இறையியல் பட்டம் பெறாமலே நவம்பர் 1927—ல் வந்து சேர்ந்தார். படிப்பில் பெற்ற அனைத்து விருதுகளையும் கடலில் போட்டுவிட்டு முனைவர் சான்றிதழை மட்டும் தன் தந்தையிடம் சேர்த்தார். இது அவருடைய ஊழிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இருந்தது. இயேசுவுக்காக நற்செய்திப் பணி செய்யும் தனது தீர்மானத்தை வெளிப்படுத்தின போது, தனது தாய் மற்றும் சகோதர்கள் அனைவரும் கலங்கினார்கள். ஆனால் சுங் தீர்மானத்தில் உறுதியாக இருந்தார். மேலும் தனக்கு சிறுவயதிலேயே நியமிக்கப்பட்டிருந்த பெண்ணை திருமணம் செய்ய ஒப்புக்கொண்டார். இவர்களுக்கு 3 பெண் மற்றும் 2 ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். பிறந்த 3 மாதத்தில் ஒரு ஆண் குழந்தை இறந்துவிட்டது. திருமதி சுங் கடைசி வரை தன் கணவனுக்கு ஏற்ற துணைவியாக இருந்தார்.

3 வருடங்கள் மின்—னான் என்ற பகுதியில் நற்செய்தியை பிரசங்கித்தார். 1931ல் ஷாங்காயிலுள்ள பெத்தேல் வேதாகம பள்ளியில் சேர்ந்து பெத்தேல் சுவிசேஷ குழுவை ஏற்படுத்தினார். இவருடைய பெயர் எல்லா இடங்களிலும் தெரிந்திருந்தது. அழைக்கப்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் சென்று கூட்டங்களை நடத்தி வந்தார். 1963ல் இவருடைய ஊழியத்தின் பயனாக சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சீனர்கள் இரட்சிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இவரது நற்செய்திப்பணியானது சீனாவில் மாத்திரமல்ல, தெற்கு ஆசியா முழுவதும் பரவி பலன் தந்தது. இவரது ஊழியத்தின் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு பயிற்சி அளிக்க 1973ல் ஒரு வேதாகப் பள்ளி துவங்கப்பட்டது.

ஜாண் சுங் சிலுவையில் அறையப்படுதல் மற்றும் இயேசுவின் இரத்தம் என்ற தலைப்புகளில் நற்செய்தி அளித்துவந்தார். இவருடைய போதனையில் இரட்சிப்பு, ஆவிக்குரிய மறுபிறப்பு மற்றும் சிலுவை சுமத்தல் ஆகியவற்றை வேதாகம அடிப்படையில் எடுத்துக் கூறுவார். இந்த நாட்களில் ஜனங்கள் பாவத்திலிருந்து சரியான மனந்திரும்புதல் இல்லாமல் இருந்தனர். எனவே பாவத்திலிருந்து மனந்திரும்பின பின்பு அவைகளை சரிசெய்ய வேண்டும் இல்லையேல் அந்த பாவ சுபாவம் மீண்டும் நமக்குள் வந்துவிடும் அபாயம் உள்ளது என வலியுறுத்தினார். இவர் பிரசங்கத்தின் போது இடையிடையே உற்சாகமூட்டும் வகையில் குதிப்பார். பிரசங்கத்தின் நடுவில் பாமாலை பாடல்களை பாடுவார். அதிக பட்சம் 30 நிமிடங்கள் வரை பாடுவதுண்டு. சில வேளைகளில் உபகரணங்களைக் கொண்டு வந்து நிரூபணத்துடன் செய்தியை ஆர்வமாக விளக்கிக் காட்டுவார். ஷாங்காயில் ஒரு பெரிய ஆலயத்தில் கடைசியாக பிரசங்கித்தார். அவரது அயராத உழைப்பினால் சரீரத்தில் நோய்வாய்ப்பட்டார். அவரது உடலில் மூன்று முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மூன்று மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார். கடைசியாக வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டார். ஆகஸ்ட் 16—ல் மனைவியிடம் மரிக்கப்போவதாக அறிக்கையிட்டார். அதன்பின் மெல்லிய குரலில் 3 பாமாலை பாடல்களைப்பாடி, மனைவியிடம் பயப்படாதே, ஆண்டவர் இயேசு வாசலண்டை நிற்கிறார் என்று கூறி தேற்றினார். 1944 ஆகஸ்ட் 18ல் தனது 43வது வயதில் ஜீவகிரீடத்தைப் பெற்றவராக தன் ஓட்டத்தை முடித்துக் கொண்டார்.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **முக்திபேன் சங்காடா** |
| தகப்பனார் பெயர் | : | Rev. வில்சன் சங்காடா |
| தாயார் பெயர் | : | ரமிளா வில்சன் |
| பிறந்த நாள் | : | 23.10.1992 |
| படிக்கும் வகுப்பு | : | XII Std., |
| சொந்த ஊரின் பெயர் | : | பாரேவா |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :–**

முக்திபேனின் தந்தை வில்சன் சங்காடா கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும், உலகப் பிரகாரமாக அனைத்து விதமான பாவங்களையும் செய்து வந்தார். மேலும் இவர் வட்டிக்குப் பணம் கொடுத்து, ஏழை ஆதிவாசி மக்களை ஏமாற்றி அதிக லாபம் சம்பாதித்தார், இவைகளெல்லாம் பாவமென்று அறியாதிருந்தார். இந்நிலையில் Rev. வில்சன் சங்காடா–விற்கு திருமணமாகி அநேக ஆண்டுகள் குழந்தைகள் இல்லை. இதனால் வேதனையடைந்த இவர், குஜராத், ஜாலோத் பகுதியில் **சகோ. வே. தேவதாஸ்** அவர்கள் நடத்தி வந்த கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, கூட்டத்தில் கலந்து கொண்டு சகோதரரிடம் ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டார். சகோதரரும் இவருக்காக பாரத்துடன் ஜெபிக்கவே, ஜெபத்தை தேவன் கேட்டு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. இதன் மூலம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட இவர் ஷாலோம் ஊழியங்களில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை :–** ஜெபிப்பதிலும், பாடுவதிலும், வேதவசனங்களை வாசிப்பதிலும் ஆடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. கோகோ விளையாட்டு நன்றாக விளையாடுவாள், நன்றாக படிப்பாள், நர்ஸாக பணி புரிய வாஞ்சை உள்ளது.

**ஜெபியுங்கள் :–** மாணவியின் படிப்பிற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், தேவன் நல்ல ஞானத்தைத் தரவும், பெற்றோர் செய்யும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** ***Mr. Samuel Sathiyanathan*** - Chennai.

¿eLÞmUôRm ì.400/-ùLôÓjÕÀp B§Yô£UôQYûWù_©jÕjRôeLØu YWXôm.
EeLsS i ToLsUt ßmE\®]oLû [ÙmRôe ÏYRt Ï A±ØLlTÓjRXôm.

# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருகே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

தமிழகத்தில் ரயிலை கவிழ்க்க அடுத்தடுத்து நடந்த சதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதிர்ஷ்டவசமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. கடந்த 12ம் தேதி நள்ளிரவு, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே சித்தணியில் வெடிகுண்டு வைத்து தண்டவாளம் தகர்க்கப்பட்டது. இன்ஜின் டிரைவர், நிலைய ஊழியரின் சாமர்த்தியத்தால் மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ் இரயில், பெரிய விபத்திலிருந்து தப்பியது. தண்டவாளத்தில் சிமெண்ட சிலாப் போட்டு 3 வது முறையாக 20ம் தேதி ரயிலை கவிழ்க்க மர்ம ஆசாமிகள் சதி செய்துள்ளனர். தனியாக வந்த இன்ஜின் சிலாப் மீது மோதியதால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

---

மெக்சிகோ நாட்டில் போதைப் பொருள் கடத்தல் கும்பலின் வன்முறை வெறியாட்டம் காரணமாக கடந்த 3 ½ ஆண்டுகளில் 23 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். அவர்களை ஒடுக்குவதற்காக அந்த நாட்டு அரசு இராணுவத்தை நாடு முழுவதும் நிறுத்தி உள்ளது. கிட்டத்தட்ட 50 ஆயிரம் இராணுவ வீரர்கள் நாடு முழுவதும் நிறுத்தப்பட்டு உள்ளனர்.

---

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ரூ.25 ஆயிரமாகவும், சட்டசபை தேர்தல் வேட்பாளர்களுக்கு ரூ.10 ஆயிரமாகவும் டெபாசிட் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

---

பெங்களூரில் இயங்கி வரும் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) உள்நாட்டு தொழில் நுட்பத்தில் தயாரித்துள்ள அதி நவீன லேசர் கைடு பாம் (Bomb) வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. நாட்டின் பாதுகாப்புக்கு தேவைப்படும் போர் தளவாடங்கள், இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் சார்பில் பெங்களூரில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# *B.T.S.* பட்டமளிப்பு விழா செயல்பாடுகள்



கலாச்சார வரவேற்பு




கேடயங்களை Rt. Rev. Dr. V. தேவதாஸ்
அவர்கள் வழங்குகிறார்.



சான்றிதழ்களை Rev. சுந்தர்ராஜன்
(அலகாபாத் பைபிள் செமினரி) அவர்கள் வழங்குகிறார்.



மெடல்களை சகோதரி
லஹிதா தேவதாஸ் அவர்கள் வழங்குகிறார்.



பட்டம் பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள்



ஜெபவேளை



ஆசீர்வாத வேளை



மூப்பர்கள் ஊழியர்களுக்காக
பாரத்துடன் ஜெபிக்கிறார்கள்

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month


# புதுப்பொலிவுடன்.... ஷாலோம் இணையதளம்

Visit our Shalom Modish Website




தமிழ் & ENGLISH

- ஊழியங்களைக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள...
- ஜெப தேவைகள் மற்றும் புதிய தகவல்களைப் பெற...
- பணித்தளங்களில் நடைபெறும் ஊழியங்களின் புகைப்படங்களை காண...
- அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரை இணைய தளத்தில் வாசிக்க...

இன்னும் தகவல்கள் ஏராளம் உள்ளன...

See Today Itself

**www.shalommission.in**

Introduce to Others

காணுங்கள்.... அறிமுகப்படுத்துங்கள்...


Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss